Notice is hereby given for conducting E-Auction sale under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002 (SARFAESI ACT) and Rules 8(6) & 9 of the Security Interest (Enforcement) Rules 2002 of the immovable properties, mortgaged to the NeoGrowth Credit Private Limited (hereinafter referred to as the **"Secured Creditor"**. Whereas the below mentioned borrower failed to repay the loan amount to the Secured Creditor within 60 days from the date of the notice dated **10.03.2025** issued by its authorized officer under section 13(2) of the SARFAESI ACT 2002. The symbolic possession of the below mentioned mortgaged property was taken by the Authorized Officer of **NeoGrowth Credit Private Limited on 09.06.2025** pursuant to the powers vested in it under the provisions of Rule 8(1) of the Security Interest (Enforcement) Rules 2002 and under the provisions of section 13 (4)and in exercise of the powers conferred there under. The under signed being the Authorized Officer of **NeoGrowth Credit Private Limited** has decided to sell the scheduled property on **"AS IS WHERE IS", "AS IS WHAT IS", and "WHATEVER THERE IS"** basis for recovery of Loan Account/App ID 1253588, 1294976 & 1303065 of **Rs. 41,70,086.11/- (Rupees Forty One Lakh Seventy Thousand Eighty Six Paise Eleven Only)** due as on 10.03.2025 along with the applicable interest and other charges together with interest and other contractual dues due to the Secured Creditor from Borrowers and Guarantors i.e. **1. CRYSTAL GRAPHIX** (A Proprietorship Firm through its Proprietors/Authorised Signatory) No 6/4, 2nd Floor, Rishaba Castle, Vallalar Nagar, Thirumullaivoyal, Tiruvallur - 600062 Tamil Nadu, Also At:-1st Floor, No 762, Ponamallee High Road Near Nsk Signal Arumbakkam Chennai, Chennai -600106 Tamil Nadu, Mob. No.:- +91-8999366863/Praveen071090@Gmail.Com, **2. KANDATHUMPURACKAL SASI PRAVEEN**, C/O: Sasi, No 6/4, Vallalaar Nagar 2nd Street, Thirumullaivoyal, Tiruvallur - 600062 Tamil Nadu, **3. INDIRABAI SASI**, R/o No 6/4, Vallalar Nagar, 2nd Street Thirumullaivoyal Tiruvallur, Tiruvallur - 600062 **Tamil Nadu, All 1 To 3 Also At**:-Flat No.S1, Second Floor Rishaba Castle, Plot No.6, Vallalar Nagar, 2nd Street Thirumullaivoyal, Tiruvallur, Maasimaneeswarar Temple Chennai-600062 Tamil Nadu.

**Description of Secured Assets (Immovable Property)**: All That Piece And Parcel Of Land And Building, Bearing Plot No.6, Comprised In S.Nos.292/7, 292/8 & 292/9 Measuring With An Extent Of 565 Sq. Ft., Yds. Out Of 2587 Sq. Ft., Together With Bearing Flat No. S1 In The Second Floor, Super Built Up Area 1044 Sq. Ft., Including Common Area And With A Covered Car Parking, Apartment Named As 'Rishaba Castle', Situated At Second Street, Vallalar Nagar, Thirumullaivoyal Village, Avadi Taluk, Thiruvallur District, Chennai-600062 And Bounded By:- East:-Plot No.7, West:- Plot No.5, North:-24 Feet Road, South:- Vacant Land. And Measuring:- East To West On The Northern Side:60 Feet, East To West On The Southern Side:60 Feet, North To South On The Eastern Side:46 Feet 6 Inches, North To South On The Western Side: 39 Feet 9 Inches, Situated Within The Sub-Registration District Of Ambattur And In The Registration District Of North Chennai.

**Reserve Price;** Rs. 30,76,500/-(Rupees Thirty Lakh Seventy Six Thousand Five Hundred Only)

**EMD**: Rs. 3,07,650/-(Rupees Three Lakh Seven Thousand Six Hundred Fifty Only)

**(a)** Last date of submission of bids: 04.07.2026 at 5:00 PM, at E auction Website Address https://www.bankeauctions.com, NeoGrowth Credit Private Limited, at Times Square, Tower E, 9th Floor, Andheri Kurla Road, Marol, Andheri East – 400059. **(b)** Time & Place of opening of bids/auction: 06.07.2026 at 10:00 AM, at E auction Website Address https://www.bankeauctions.com, NeoGrowth Credit Private Limited, at Times Square, Tower E, 9th Floor, Andheri Kurla Road, Marol, Andheri East – 400059.

For any other information, Sh. Pratik Varma, Authorized Officer (Mobile no. +91-9819325685) may be contacted at the above address.

**STAUTORY 15 DAYS NOTICE UNDER RULE 8(6) & 9(1) OF THE SECURITY INTEREST (ENFORCEMENT) RULES 2002.**

The Borrower/Co-Borrowers/guarantors /mortgagers are hereby notified to pay the sum as mentioned above along, with up-to-date interest and ancillary expenses before auction, failing which the auction of mortgaged property mentioned above shall take place and balance dues if any shall be recovered with interest/cost.
**Date: 20.06.2026, Place: Chennai, Tamil Nadu Sd/- Authorised Officer, M/s Neo Growth Credit Private Limited**



**PUBLIC NOTICE**

It is herein informing the public that my client Mr. Suriya Prakasam, S/o. Munusamy, residing at No.5/85, sannathi street kovur Chennai-600 128 that as on 13.06.2026 around 10.30 AM when he intend to meet me at Ramapuram he kept his original sale deed registered as document number 11323/2011 at SRO-Kundrathur pertaining to the property situated at Kancheepuram District, Kundrathur Taluk, Kovur Village, comprised in Survey No.91/21C to an extent of 4710 Sq.ft., of Land along with other original sale deeds in document numbers 10896/2010, 2489/2009 and 1729/1997 in a bag in his bike and after a short break by taking tea near Ramapuram Peepal tree he visited me at Ramapuram where he found those four documents missed from his motor bike and he unable to trace out the same even after his best efforts, thereby, if anyone found those original documents it is requested to inform me or my client either, otherwise if anyone misused the same it would not bind my client legally.

**G.Suresh Babu, B.Sc., B.L.,**
**Advocate**, Cell No.9080803590

## நகைச்சுவை, வில்லன் கேரக்டரிலிருந்து

# ‘கதை நாயகனாக’ ரவி மரியா: அடடே, காலம் மாறிப் போச்சே!

அரசியல் கிண்டல் கேலி நையாண்டியில் இது ஒரு ரகம்: மக்கள் தலைவா! இது படத்தின் தலைப்பு. அதன் கீழே போட்டு இருக்கும் ஆங்கிலத் துணை தலைப்பு: For sale என்பதுதான் அப்படி என்ன சொல்லி இயக்குனர் ராம்தேவ் என்று கேள்வி எழுப்ப வைக்கும்.

ரவிமரியா கலை வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு படம் இது. இயக்குனராக இருந்து நடிகராக சின்னச் சின்ன துணைப் பாத்திரங்களில் தலைகாட்டி 20%, 40%, 60% என்று காட்சிகள் கூடி, ஒவ்வொரு படத்திலும் உயர்ந்து வந்தவர் ‘மக்கள் தலைவா’வில் கதையின் நாயகன் (வாழ்த்துகள்).

‘உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு’ – திருக்குறளுக்கு உதாரணமாகி இருக்கிறார் ‘கவிதாலயா’ சரவணன்.

சொந்தத்தில் படம் எடுக்கக் களத்தில் இறங்கி, கால் கிணற்றைக் கூடத் தாண்ட முடியாமல் விழி பிதுங்கிய இயக்குனர் ராம்தேவ் கதவைத் தட்டிய நேரத்தில்... உதவிக்கரம் நீட்டி, அரைகுறையாக நின்று விடாமல் முழுக் கிணற்றையும் அவரைத் தாண்ட வைத்து மக்கள் தலைவாவை திரையில் விழ வைத்திருக்கும் நல்ல மனசுக்காரர் கவிதாலயா சரவணன். (நன்றிக் கடனுக்கு இவருக்கும் ஆளும் கட்சித் தலைவர் – முதல்வர் வேடம்).

பேசினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம் அரசியல் மேடைகளில் என்ற நிலையில் இருக்கும் அரசியல்வாதி பழ கருப்பையாவுக்கு ஆளும் கட்சியில் முன்வரிசை மந்திரி வேடம். இதே போல இன்னொரு ஆளுமை நாஞ்சில் சம்பத்தும்...

அரசியலின் நுழைந்தால் எப்படி ஊழலைப் பண்ணி லட்சம் லட்சமாக பணம் சம்பாதிக்கலாம் என்று,




அரசுக்கு வரும் பணத்தை ‘ஆட்டைய போடலாம்’ என்று நாயகன் ரவி மரியாவுக்கு பாலபாடம் எடுக்கும் அரசியல் தலைவர் வேடம்.

1967 தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர் பெருந்தலைவர் காமராஜர். அதை நினைத்து நினைத்து வேதனைப்பட்டு தமிழக அரசியலை மாற்றிக் காட்ட வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பும் பெரும் பணக்கார தொழிலதிபர் ராதாரவி. ரவி மரியாவை பொம்மையாக்கி தன் பேச்சுக்கு தலையாட்டி செயல்பட வைத்து திரை மறைவில் நடத்தும் நாடகம் என்ன – இதுதான் மக்கள் தலைவா திரைக்கதை.

பாட்டிலுக்குப் பத்து ரூபாய் டாஸ்மாக் கடையில் தகராறு பண்ணும் கேரக்டரில் டைரக்டர் பேரரசு (ஆட்டோ டிரைவர்), அதிக பட்சம் ஐந்து நிமிடம் தான்.

மணல் கொள்ளை, டாஸ்மாக் கொள்ளை, லஞ்சம் லாவண்யத்தை மையமாக்கி 110 நிமிடத்திற்கு படத்தை ஓட விட்டு இருக்கிறார்கள்.

ரவி மரியா, அக்னி வருண், கஞ்சா கருப்பு, பயில்வான் ரங்கநாதன், டைரக்டர் ரங்கநாதன், டைரக்டர் ராம் தேவ் (கிளைமாக்சில் சாக்லேட் முதல்வர்... கேலிக் கூத்து இப்படியும் ஒரு முதல்வர் இருப்பாரா... 5¼ கோடி வாக்காளர்களிடமிருந்து ஒருவரை முதல்வராகத் தேர்ந்து எடுப்பதான கதை. அதிகக் கற்பனை. நடக்குமா... கேலிக்கூத்து).

கார்த்திக் நாயர் கேமரா, துளசிராமன் இசை. இருவரும் தமிழுக்குப் புதியவர்கள்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாறி இருக்கிறது. இப்போது விஜய்யின் த.வெ.க. கட்சியில் முக்கியப் பொறுப்பில் நாஞ்சில் சம்பத். இவர், எப்படி லஞ்சம் ஊழல் மூலம் லட்சம் லட்சமாகப் பண்ணலாம் என்று ஆட்சிக்கு வரவிருக்கும் ரவி மரியாவுக்கு அரிச்சுவடி பாடம் எடுப்பதும்...

‘எனக்கு வந்த சூட்கேசை எல்லாம் பர்மா பஜாரில் கொடுத்திருந்தாலே ஒரு சூட்கேஸ் கடையை வைத்திருக்கலாம் என்று சொல்வதும்...

"முடியாததை சொல்லணும்... முடிஞ்சதை செய்யணும், இதுதான் நம்ம கொள்கை..." என்று மரியாவிடம் சொல்வதும்... இன்றைய காலகட்டத்தில் அதுவும் முக்கிய பொறுப்பில் விஜய் கட்சியில் நாஞ்சில் சம்பத். ஏற்புடையதா? ஆட்சி மாறிய நிலையில், இக்காட்சியை ஜீரணிக்கத் தான் முடியுமா?!

மக்கள் தலைவா தேர்தலுக்கு முன் வந்திருந்தால் ரசனை வேறு, இப்போது ரசனை வேறு. காலம் மாறி போச்சு.

தளபதி விஜய்க்காக, அவர் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரிடம் ராம்தேவ் சொன்ன கதையாம் – மக்கள் தலைவா! (சிரிப்புத் தான் வருகுதய்யா).

# டாலரில் வெளிநாட்டு இந்தியர் டெபாசிட் தொகைக்கு சவுத் இந்தியன் வங்கி வட்டி 6.50% ஆக உயர்வு

சென்னை,ஜூன் 20– முன்னணி தனியார் துறை வங்கிகளில் ஒன்றான சவுத் இந்தியன் வங்கி, வெளிநாட்டு இந்தியர்கள் (என்ஆர்ஐ) வைத்திருக்கும் அமெரிக்க டாலர் வைப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை, மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் காலவரையிலான வைப்பு தொகைகளுக்கு ஆண்டுக்கு 6.50% ஆக உயர்த்தியுள்ளது. இதன் மூலம் என்ஆர்ஐ வாடிக்கையாளர்கள் தங்கள் வெளிநாட்டு நாணய சேமிப்புகளில் அதிக வருமானம் பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.

இந்த வட்டி விகித மாற்றம், இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் அறிமுகப்படுத்திய அமெரிக்க டாலர் மற்றும் இந்திய ரூபாய் வெளிநாட்டு நாணய மாற்று வசதி காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வசதியின் கீழ், மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு புதிய வெளிநாட்டு நாணய வைப்பு தொகைகளை வங்கிகள் ரிசர்வ் வங்கியுடன் அமெரிக்க டாலரை மாற்றிக்கொள்ள முடியும். இதன் மூலம் வங்கிகள் நிலையான வெளிநாட்டு நாணய வைப்பு தொகைகளை திரட்டவும், நாணய மாற்று ஆபத்துகளை திறம்பட நிர்வகிக்கவும் முடியும்.

இந்த திட்டம், செப்டம்பர் 30 வரை பெறப்படும் தகுதியான வெளிநாட்டு நாணய வைப்பு தொகைகளுக்கும் பொருந்தும். மேலும் இந்த மாற்று வசதி அக்டோபர் 16 வரை செயல்பாட்டில் இருக்கும். ரிசர்வ் வங்கியின் இந்த மாற்று வசதி, நீண்டகால வெளிநாட்டு நாணய வைப்பு வளர்ச்சியை வங்கி துறையில் ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் என்ஆர்ஐ வாடிக்கையாளர்கள் தங்கள் அமெரிக்க டாலர் சேமிப்புகளில் அதிக வருமானத்தைப் பெறுவதோடு, சவுத் இந்தியன் வங்கியின் சேவைகளையும் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இதுபற்றி மேலும் அறிய www.southindianbank.bank.in என்ற வலைதளம் பார்க்கலாம்.



டாக்டர் லிங்கேஷ் சாரிட்டி பவுண்டேஷனின் சிவம் நேத்ராலயா சார்பில், மேற்கு மாம்பலம் வாழைத் தோப்பு பகுதியில் உள்ள ஸ்ரீ இளங்காளி அம்மன் கோயிலில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில், மேற்கு மாம்பலம் வியாபாரிகள் நலசங்க செயலாளர் தா. சிவராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 42 நபர்களுக்கு இலவச கண்ணாடிகளை வழங்கினர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனை செய்து கொண்ட இம் முகாமிற்கான ஏற்பாடுகளை எக்ஸ்னோரா பாபு செய்திருந்தார்.

## கூடுதல் சரக்கு ஏற்றுமதி இறக்குமதிக்கு சென்னை துறைமுகம் சலுகை கட்டணம் அறிமுகம்

சென்னை, ஜூன் 20– சென்னை துறைமுக ஆணையம், இதன் வாடிக்கையாளர்களுக்கு 80% வரை கட்டணச் சலுகைகளையும், 10% வரை தாமதக் கட்டண ஊக்கத்தொகையையும் வழங்கும் சரக்கு ஊக்கத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம், கூடுதல் சரக்குகளை ஈர்ப்பது, வாடிக்கையாளர் விசுவாசத்திற்கு வெகுமதி அளிப்பது மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறையுடனான நீண்டகால கூட்டாண்மைகளை வலுப்படுத்துவது ஆகும்.

இத்திட்டம், துறைமுகத்தால் இயக்கப்படும் கடலோர மற்றும் ஏற்றுமதி இறக்குமதி சரக்குகள் ஆகியவற்றிற்கு உள்ளடக்கியது.

அதிக சரக்கு கையாள ஊக்குவிக்கவும், வணிகம் செய்வதை எளிதாக்கவும், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் கண்டெய்னர் அல்லாத சரக்குகளுக்கான விருப்பமான நுழைவாயிலாக சென்னை துறைமுகம் இருக்கிறது.

விரிவான தகுதி நிபந்தனைகள், சலுகைக் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை அறிந்துகொள்ள, tm@chennaiport.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

# வெளிநாட்டு இந்தியர் டாலரில் டெபாசிட் செய்தால் 3 ஆண்டுக்கு ஐ.ஓ.பி. 6.5% வட்டி

சென்னை, ஜூன் 20– முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் அந்நியச் செலாவணியில் பராமரிக்கும் வங்கி கணக்கு – வைப்புத்தொகைக்கான வட்டி விகிதங்களை கடந்த 15–ந் தேதி முதல் மாற்றியமைத்துள்ளது. இந்த மாற்றத்துடன், வங்கி ஒரு புதிய 'சிறப்பு FCNR(B) வைப்புத்தொகை திட்டத்தையும்' அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அவர்கள் முதலீடு செய்யும் அமெரிக்க டாலர் வைப்புத்தொகைக்கு3 முதல் 5 ஆண்டுகள் வரையிலான கால அளவிற்கு ஒரு ஆண்டுக்கு 6.50% என்ற நிலையான வட்டியை வழங்குகிறது. இது நிதி சந்தையில் வங்கிகளால் தற்போது வழங்கப்படும் மிக அதிகமான வட்டி விகிதங்களில் ஒன்றாகும்.

FCNR(B) வைப்புத்தொகை என்பது, வெளிநாடு வாழ் இந்தியர்களும் (NRIs), இந்திய வம்சாவளியினரும் (PIOs) தங்களின் வெளிநாட்டு வருவாயை இந்திய வங்கியில் வெளிநாட்டு கரன்சியாகவே சேமித்து, அதே கரன்சியில் நிலையான, நிர்ணயிக்கப்பட்ட வட்டி வருமானத்தைப் பெற உதவும் ஒரு திட்டமாகும். இதில் அசலும் வட்டியும், வைப்புத்தொகையாக முதலில் செலுத்தப்பட்ட வெளிநாட்டு கரன்சியிலேயே கணக்கிடப்படுவதால், இந்திய ரூபாயின் மாற்று விகித மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் வைப்புத்தொகைதாரர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. முழுமையான பாதுகாப்பு இதனால் கிடைக்கிறது.


## PUBLIC NOTICE

Notice is hereby given that my original Bachelor of Arts Degree Certificate, bearing Registration Number A2017607 issued by Dr. Manmohan Singh Bengaluru City University in the passing year, 2023, has been lost/misplaced and is untraceable. A police complaint/LDR under Report No: [SC773202500342] dated 02/09/2025 has been filed. If anyone finds the said certificate, please return it to the address below or contact the undersigned.

Name: Ismail Mohamed Farook
Address: 1/4, VOC Street, Padur, OMR, Tamil Nadu-603103
Contact Number:+91-9486734154

## NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Pursuant to Rule 8 of the Investor Education and Protection Fund (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016, NOTICE is hereby given that the following share certificates issued by the Company, Sundaram Fasteners Limited, registered in my / our name, has / have been lost / misplaced :

| Folio No. | Name of Shareholder(s) | No of Shares | Share Certificate No(s) | Distinctive Nos. From | Distinctive Nos. To |
|---|---|---|---|---|---|
| 907 | K. CHINNAPPA | 6400 | 400916 | 53289351 | 53295750 |
| 907 | | 6400 | 411735 | 157817366 | 157823765 |

Any person who has a claim in respect of the said securities should lodge such claim with evidence to the Company, at its Registered Office, **Sundaram Fasteners Limited** or to its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days publication of this notice, else the Company will proceed to settle the claim in favour of the registered holder(s). The Company shall not entertain any claim thereafter. Any person dealing with the above said shares will be doing so at their own risk.

Place : Chennai
Date : June 19, 2026

NAME OF THE SHARE HOLDER
**K. Chinnappa**
29/15, Collector Nagar, First Street, Anna Nagar West Extension
Chennai - 600 101, Ph: 9003237846

## கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

சுவாதீன அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051.

[illegible]

## IBC 2016ன் கீழ் மின்னணு-ஏல விற்பனை அறிவிப்பு

**M/s.சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிடெட் (கலைப்பில் உள்ளது)**

CIN : U02102TZ1992PLC003585

கலைப்பாளர் (Liquidator) : கோபால்சாமி கணேஷ் பாபு, FCMA, FCS, இன்சால்வென்சி புரொபஷனல்

IBBI பதிவு எண் : IBBI/IPA-002/IP-N00246/2017-18/10731

E-1104, கேசாக்ராண்ட் ஏதென்ஸ், வானகரம், அம்பத்தூர் மெயின் ரோடு, குப்பம், சென்னை - 600058.

IBBI (கலைப்பு செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 37A மற்றும் அட்டவணை I-ன் கீழ், மெஸர்ஸ் சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிடெட் (கலைப்பில் உள்ளது) நிறுவனத்தின் பின்வரும் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக https://ibbi.baanknet.com என்ற மின்னணு ஏல தளம் மூலம் ஏலங்கள் வரவேற்கப்படுகின்றன:

**கலைப்பு ஒழுங்குமுறைகளின் விதிமுறை 37A மற்றும் அட்டவணை I-ன் கீழ் விற்பனை செய்யப்பட வேண்டிய சொத்துக்களின் விபரங்கள்**

| சொத்துக்களின் விபரங்கள் | (நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.) | விற்பனை முறை (நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.) | கட்டுத்தொகை வைப்பு EMD (ரூ.) | கூடுதல் ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. நிலுவையிலுள்ள கூடுதல் விற்பனை வரி செலுத்தப்பட்டதன் ரீஃபண்ட் (நடவடிக்கை எடுக்கக்கூடிய உரிமை/Actionable Claim) 2. கார் - ஹுண்டாய் தயாரிப்பு - எக்ஸ்சென்ட் (Xcent) - பெட்ரோல், பதிவு எண் : TN86C 9473, எஞ்சின் இயங்கும் நிலையில் உள்ளது. | 71,70,000 | IBBI (கலைப்பு செயல்முறை) ஒழுங்குமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 37A மற்றும் அட்டவணை I-ன் கீழ் எளிதில் பணமாக்க முடியாத சொத்துக்கள் (Not Readily Realizable Assets) | 7,17,000 | 10,000 |

| முக்கிய நிகழ்வுகள் | தேதி மற்றும் நேரம் |
|---|---|
| ஆவணங்கள் மற்றும் வாகனத்தை ஆய்வு செய்வதற்கான கடைசி தேதி : | 15-07-2026, புதன்கிழமை மாலை 5.00 மணி வரை |
| அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பதோடு EMD செலுத்துவதற்கான கடைசி தேதி (நீட்டிப்பு உட்பட) | 18-07-2026, சனிக்கிழமை மாலை 5.00 மணி வரை |
| மின்னணு ஏல (E-Auction) தேதி மற்றும் நேரம் | 20-07-2026, திங்கள் கிழமை (காலை 10:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை |

**மின்-ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:**

1) ஆன்லைன் மின்னணு ஏலத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஏலப் படிவம் (BID Form), தகுதி அளவுகோல்கள், ஏலதாரர்களின் பிரகடனம், EMD தேவை போன்றவற்றுக்கு, ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் https://ibbi.baanknet.com என்ற இணையதளத்தில் கிடைக்கக்கூடிய மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தை (E-Auction Process Information Document) பார்க்கவும்.

(2) விருப்பமுள்ள ஏலதாரர்கள், திவால் மற்றும் திவாலா நிலை குறியீட்டின் (Insolvency and Bankruptcy Code) பிரிவு 29A-ன் கீழ் தங்களின் தகுதிக்கான உறுதிமொழி உட்பட தேவையான ஆவணங்களை BAANKNET ஏல தளம் (https://ibbi.baanknet.com) மூலம் சமர்பிக்க வேண்டும்.

(3) விருப்பமுள்ள ஏலதாரர்கள் கட்டுத்தொகை வைப்பை (EMD) BAANKNET ஏல தளம் : https://ibbi.baanknet.com மூலம் டெபாசிட் செய்ய வேண்டும்.

(4) மேலே உள்ள பிரிவு 2இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிமொழியில், விருப்பமுள்ள ஏலதாரருக்குப் பொருந்தக்கூடிய வரையில், குறியீட்டின் பிரிவு 29A-ன் கீழ் எந்தவொரு தகுதியின்மையும் இல்லை என்று குறிப்பிடப்பட வேண்டும். ஏதேனும் ஒரு கட்டத்தில் தகுதியற்றவர் என கண்டறியப்பட்டால், 28 மார்ச் 2025 தேதியிட்ட IBBI சுற்றறிக்கை எண். IBBI/LIQ/84/2025-ன் படி, செலுத்தப்பட்ட EMD பறிமுதல் செய்யப்படும் என்பதை ஏலதாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

(5) EMD தொகையை BAANKNET போர்ட்டலில் உள்ள இ-வாலட்டில் (e-Wallet) பணத்தைச் சேர்த்து, அந்தந்த ஏலத்திற்கான 'Participate' என்பதைக் கிளிக் செய்வதன் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும். தகுதியுள்ள ஏலதாரர்களின் பெயர்கள் கலைப்பாளரால் அடையாளம் காணப்பட்டு, www.baanknet.com என்ற போர்ட்டலில் ஆன்லைன் மின்னணு ஏலத்தில் பங்கேற்க அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். ஆர்வமுள்ள ஏலதாரர் ஏல போர்ட்டலில் தங்களது பயனர் ஐடி (User ID) & கடவுச்சொல்லை (Password) உருவாக்கி, தங்களது EMD தொகையை போர்ட்டலின் இ-வாலட்டில் டெபாசிட் செய்ய வேண்டும். மின்னணு ஏல போர்ட்டல் தொடர்பான ஏதேனும் சந்தேகங்களுக்கு, BAANKNET (Bank Asset Auction Network) நிறுவனத்தை அணுகவும். மின்னஞ்சல் ஐடி : support.baanknet@psballiance.com, கைபேசி எண் : +918291220220.

(6) வெற்றி பெற்ற ஏலதாரர், மீதமுள்ள விற்பனைத் தொகையை (அதாவது, பெறப்பட்ட EMD-ஐ கழித்த பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏலத் தொகை மற்றும் பிற பொருந்தக்கூடிய வரிகள்/கடமைகள்) செலுத்த வேண்டிய வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச காலம் LOI (Letter of Intent) வழங்கப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்கள் ஆகும்.

(7) இந்த அழைப்பு வருங்கால ஏலதாரர்களை அழைப்பதற்காக மட்டுமே என்றும், விற்பனையை நடைமுறைப்படுத்துவதற்கு கலைப்பாளர் அல்லது நிறுவனத்தின் தரப்பில் எந்தவிதமான பிணைப்பு கடப்பாட்டையும் இது உருவாக்காது என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது. கலைப்பு செயல்முறையின் நலன் கருதி தனது விருப்பப்படி மின்னணு ஏலத்தின் காலக்கெடு உள்ளிட்ட எந்தவொரு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் நீட்டிக்க/ஒத்திவைக்க/ரத்து செய்ய மற்றும்/அல்லது மாற்றியமைக்க, நீக்க கலைப்பாளருக்கு உரிமை உண்டு. மேலும் ஏலத்தின் எந்தவொரு கட்டத்திலும் எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி அல்லது எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமல் எந்தவொரு ஏலத்தையும் நிராகரிக்க கலைப்பாளருக்கு உரிமை உண்டு.

(8) மின்னணு ஏலமானது "உள்ளது உள்ளபடி" (AS IS WHERE IS), "என்ன நிலையில் உள்ளதோ அந்த நிலையில்" (AS IS WHAT IS), "எது உள்ளதோ அதுமட்டுமே" (WHATEVER THERE IS) மற்றும் "மறுபரிசீலனை இல்லை" (NO RECOURSE) என்ற அடிப்படையில் மட்டுமே நடத்தப்படும்.

தேதி : 19-06-2026, இடம் : சென்னை

ஒப்பம்/-
**கோபால்சாமி கணேஷ் பாபு**, FCMA, FCS
கலைப்பாளர் - சரஸ்வதி உத்யோக் இந்தியா லிமிடெட் (கலைப்பில் உள்ளது)
IBBI பதிவு எண் : IBBI/IPA-002/IP-N00246/2017-18/10731
E-1104, கேசாக்ராண்ட் ஏதென்ஸ், வானகரம், அம்பத்தூர் மெயின் ரோடு, குப்பம், சென்னை - 600 058

## லேட்டன்ட்வியூ அனலிட்டிக்ஸ் லிமிடெட்

CIN : L72300TN2006PLC058481

பதிவு அலுவலகம்: 5வது தளம், நெவில் டவர், யூனிட் 6,7 மற்றும் 8, ராமானுஜன் ஐடி சிட்டி, ராஜீவ் காந்தி சாலை, தரமணி சென்னை - 600113, தமிழ்நாடு
தொலை பேசி: +91 (044) 4344 1700
இணையதளம்: www.latentview.com
மின்னஞ்சல்: investorcare@latentview.com

### அஞ்சல் வாக்குப்பதிவு மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான அறிவிப்பு

லேட்டன்ட்வியூ அனலிட்டிக்ஸ் லிமிடெட் ("நிறுவனம்") தனது உறுப்பினர்களிடமிருந்து பின்வரும் தீர்மானங்களுக்கு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ("e-voting" / "remote e-voting") மூலமாக மட்டுமே நடைபெறும் அஞ்சல் வாக்குப்பதிவு ("Postal Ballot") வாயிலாக ஒப்புதலைக் கோருகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறது.

| வரிசை எண் | தீர்மானங்களின் விவரம் | தீர்மான வகை |
|---|---|---|
| 1 | திரு. ரீட் கண்ட்டிப் (DIN: 09241056) அவர்களை நிறுவனத்தின் சுயாதீன இயக்குநராக, 23 ஜூலை 2026 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு, இரண்டாம் முறையாக மீண்டும் நியமிப்பது | சிறப்பு தீர்மானம் |
| 2 | டாக்டர் ஆர். ரகுத்தம ராவ் (DIN: 00146230) அவர்களை நிறுவனத்தின் சுயாதீன இயக்குநராக, 23 ஜூலை 2026 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு, இரண்டாம் முறையாக மீண்டும் நியமிப்பது | சிறப்பு தீர்மானம் |
| 3 | திரு. A.V. வெங்கட்ராமன் (DIN: 01240055) அவர்களை நிறுவனத்தின் முழுநேர இயக்குநர் மற்றும் தலைவர் பதவியில் 05 ஆகஸ்ட் 2026 முதல் 5 ஆண்டுகளுக்கு மீண்டும் நியமிப்பது | சாதாரண தீர்மானம் |
| 4 | திருமதி. பிரமாத்வதி ஜெந்தியாலா (DIN: 00732854) அவர்களை நிறுவனத்தின் முழுநேர இயக்குநராக 05 ஆகஸ்ட் 2026 முதல் 5 ஆண்டுகளுக்கு மீண்டும் நியமிப்பது | சாதாரண தீர்மானம் |

அஞ்சல் வாக்குப்பதிவு அறிவிப்பு ("அறிவிப்பு") நிறுவனத்தின் இணையதளமான https://www.latentview.com/-இல் கிடைக்கிறது; மேலும் இதனை பங்குச் சந்தைகளின் இணையதளங்களான BSE Limited ("BSE") - www.bseindia.com மற்றும் National Stock Exchange of India Limited ("NSE") - www.nseindia.com ஆகியவற்றிலிருந்தும், CDSL-இன் இணையதளமான www.evotingindia.com-இலிருந்தும் பெறலாம்.

2013-ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 108 மற்றும் 110; 2014-ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் செயல்முறை) விதிகளின் விதி 20 மற்றும் 22; இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015-இன் ஒழுங்குமுறை 44 ("பட்டியலிடல் ஒழுங்குமுறைகள்"); இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் வெளியிட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலகத் தரநிலை ("SS-2") (இவை அனைத்தும் அவ்வப்போது திருத்தப்பட்டவை); மற்றும் 22 செப்டம்பர் 2025 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 03/2025-இன் மூலம் M C A ( கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம்) பரிந்துரைத்த பொதுக் கூட்டங்களை நடத்துதல் அல்லது மின்னணு வாக்குப்பதிவு (e-voting) மூலம் அஞ்சல் வாக்குப்பதிவு செயல்முறையை மேற்கொள்வதற்கான தேவைகள் மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட பிற தொடர்புடைய சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில், நிறுவனம் தனது அனைத்து உறுப்பினர்களுக்கும் 'தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு' (remote e-voting) வசதியை வழங்குகிறது. இதன் மூலம், உறுப்பினர்கள் நேரடி அஞ்சல் வாக்குப்பதிவு படிவத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களுக்கும் மின்னணு முறையில் வாக்களிக்க முடியும். அதன்படி, இந்த அஞ்சல் வாக்குப்பதிவுக்காக, அறிவிப்பின் அச்சுப் பிரதி, அஞ்சல் வாக்குப்பதிவு படிவம் மற்றும் கட்டணம் செலுத்தப்பட்ட வணிகப் பதில் உறை (pre-paid business reply envelope) ஆகியவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்படமாட்டாது. 'நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்' (NSDL), 'சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்' (CDSL) மற்றும் 'MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்' (RTA) ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகளின் உரிமையாளர் பட்டியலில் (List of Beneficial Owners) பெயர்கள் இடம்பெற்றுள்ள மற்றும் **வெள்ளிக்கிழமை, 12 ஜூன் 2026** ("காலக்கெடு தேதி" அல்லது Cut-off Date) அன்று நிறுவனத்திடம் மின்னஞ்சல் முகவரிகள் கிடைக்கப்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே, அவர்களின் ஒப்புதலைக் கோரும் அறிவிப்பை நிறுவனம் **19 ஜூன் 2026** அன்று மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைத்துள்ளது.

குறிப்பிட்ட காலக்கெடு தேதியில் (Cut-off date) உறுப்பினர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்ட பங்குகளின் மதிப்பின் அடிப்படையிலும் வாக்குரிமைகள் கணக்கிடப்படும்.

உறுப்பினர்கள் பாதுகாப்பான முறையில் மின்னணு வழியில் வாக்களிப்பதைச் சாத்தியமாக்கும் வகையில், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (remote e-voting) வசதிகளை வழங்க நிறுவனம் CDSL-இன் சேவைகளை ஈடுபடுத்தியுள்ளது. இந்தத் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **2026 ஜூன் 20, சனிக்கிழமை அன்று காலை 09:00 மணிக்கு (IST) தொடங்கி, 2026 ஜூலை 19, ஞாயிறு அன்று மாலை 05:00 மணிக்கு (IST)** நிறைவடையும். அதன்பிறகு உடனடியாக CDSL மூலம் இந்த வாக்குப்பதிவு வசதி முடக்கப்படும்; குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு வாக்களிக்க அனுமதிக்கப்படாது. அறிவிப்பில் உள்ள வழிமுறைகளை உறுப்பினர்கள் கவனமாகப் படித்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, **2026 ஜூலை 19, ஞாயிறு** மாலை 5:00 மணிக்குள் (IST) தங்கள் ஒப்புதலை (ஆதரவு/FOR) அல்லது மறுப்பை (எதிர்ப்பு/AGAINST) பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; அவ்வாறு செய்யத் தவறினால், அந்த உறுப்பினரிடமிருந்து வாக்கு எதுவும் பெறப்படவில்லை என்றே கண்டிப்பாகக் கருதப்படும். இக்காலகட்டத்தில், காலக்கெடு தேதியில் (Cut-off date) பௌதீக அல்லது மின்னணு வடிவில் நிறுவனத்தின் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்க வேண்டும். காலக்கெடு தேதியில் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் (paid-up Equity Share Capital) உறுப்பினர்கள் கொண்டுள்ள பங்குகளின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அவர்களின் வாக்குரிமை அமையும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் ஒருமுறை வாக்களித்த பிறகு, அதைத் தொடர்ந்து மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படாது. RTA-விடம் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்வதற்கான நடைமுறை மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான நடைமுறை ஆகியவை அறிவிப்பின் 'குறிப்புகள்' (Notes) பகுதியில் வழங்கப்பட்டுள்ளன

அஞ்சல் வாக்குப்பதிவு நடைமுறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்வதற்காக, 'M/s.P.முத்துக்குமரன் மற்றும் அசோசியேட்ஸ்' நிறுவனத்தின் கூட்டாளிகளான திரு. P. முத்துக்குமரன் (C.P. எண்: 20333) அல்லது அவர் இல்லாத பட்சத்தில் திருமதி. S.லட்சுமி (C.P. எண்: 25451) ஆகியோரை ஆய்வாளராக (Scrutinizer) நிறுவனம் நியமித்துள்ளது.

அஞ்சல் வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை) மூலம் நடத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவின் முடிவுகள் மற்றும் ஆய்வாளரின் அறிக்கை ஆகியவை, அஞ்சல் வாக்குப்பதிவு நிறைவடைந்ததிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள், அதாவது **2026 ஜூலை 21 செவ்வாய்க்கிழமை** அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படும். இம்முடிவுகள் நிறுவனத்தின் இணையதளமான https://www.latentview.com/ மற்றும் CDSL-இன் இணையதளமான www.evotingindia.com ஆகியவற்றிலும் வெளியிடப்படும்; அத்துடன், நிறுவனத்தின் பங்கு மூலதனப் பங்குகள் (Equity Shares) பட்டியலிடப்பட்டுள்ள BSE மற்றும் NSE ஆகிய பங்குச் சந்தைகளுக்கும் இவை தெரிவிக்கப்படும். அஞ்சல் வாக்குப்பதிவு மூலம் தீர்மானங்கள் உரிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால், அவை தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்காகக் குறிப்பிடப்பட்ட கடைசி நாளான **2026 ஜூலை 19 ஞாயிற்றுக்கிழமையன்றே** நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (remote e-voting) செயல்முறை தொடர்பான தொழில்நுட்ப உதவிகள், கேள்விகள் அல்லது உள்நுழைவுச் சிக்கல்களுக்கு, உறுப்பினர்கள் திரு. ராகேஷ் தல்வி (மூத்த மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் ("CDSL")) அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். இவரது அலுவலக முகவரி: A விங், 25வது மாடி, மராத்தான் ஃபியூச்சர்க்ஸ், மபத்லால் மில் காம்பவுண்ட்ஸ், என். எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400013. மேலும், helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ அல்லது 1800 21 099 11 என்ற கட்டணமில்லா உதவி எண் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

லேட்டன்ட்வியூ அனலிட்டிக்ஸ் லிமிடெட் சார்பாக
**பா.சீனிவாசன்**
நிறுவன செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி
உறுப்பினர் எண்: F11519

தேதி: 19 ஜூன் 2026
இடம்: சென்னை

## NEOGROWTH

Lending simplified. Growth amplified.

### நியோ க்ரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டைம்ஸ் ஸ்கொயர், டவர் E, 5வது தளம், அந்தேரி குர்லா சாலை, மரோல், அந்தேரி கிழக்கு 400059.

மின்னணு ஏலம்/விற்பனை அறிவிப்பு [illegible]

[illegible]

(a) விலைப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி: 04.07.2026, மாலை 5:00 மணி, மின்னணு ஏல இணையதள முகவரி https://www.bankeauctions.com, நியோ க்ரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட், டைம்ஸ் ஸ்கொயர், டவர் E, 5வது தளம், அந்தேரி குர்லா சாலை, மரோல், அந்தேரி கிழக்கு 400059. (b) விலைப்புள்ளிகள்/ஏலம் திறக்கப்படும் நேரம் மற்றும் இடம்: 06.07.2026 அன்று காலை 10.00 மணி, மின்னணு ஏல இணையதள முகவரி https://www.bankeauctions.com, நியோ க்ரோத் கிரெடிட் பிரைவேட் லிமிடெட், டைம்ஸ் ஸ்கொயர், டவர் E, 5வது தளம், அந்தேரி குர்லா சாலை, மரோல், அந்தேரி கிழக்கு 400059.

[illegible]

## வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் தாம்பரம்

ந.க.எண்.444 / 2026 / அ4 நாள்: 14.02.2026
2516

திரு. சதிஷ் த/பெ. நாகராஜன்
க.எண். 35, 3வது மெயின் ரோடு,
கிருஷ்ணா நகர், அஸ்தினாபுரம் கிராமம்,
பல்லாவரம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம். ... மனுதாரர்

எதிராக

வருவாய் கோட்ட அலுவலர்,
கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம்.
... எதிர்மனுதாரர்

மனுதாரர் தன் தாய் திருமதி. பத்மா க/பெ. (லேட்) நாகராஜன், க.எண். 35, 3வது மெயின் ரோடு, கிருஷ்ணா நகர், அஸ்தினாபுரம் கிராமம், பல்லாவரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்ற விலாசத்தில் கடந்த 13.08.2024 என்ற தேதியில் இறந்ததை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட காலத்தில் அறியாமை காரணமாக மனுதாரர் தன் தாயின் இறப்பு பதிவு செய்யவில்லை.

ஆகவே கால தாமதத்திற்கு மன்னிப்பு கோரியும் மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்திரவிடக் கோரியும் வருவாய் கோட்டாட்சியரிடம் மனுதாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் களம் தீர்ப்பாயத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி இந்த அறிவிப்பினை கண்ட 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ளலாம்.

திரு. சதிஷ்
மனுதாரர்.